(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மே 02 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 மே 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1541/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறு தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித்தனியே ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சிறு தேயிலைத் தோட்டங்களின் மூலமாக வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் மானியத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையின் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1577/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் நிறுவப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்தச் சங்கங்களுக்கு உட்பட்டதாக நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) குறித்த வங்கி முறைமையில் இன்றளவில் உள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) குறித்த வங்கி முறைமையிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கூட்டுறவு கிராமிய வங்கி முறைமைக்கென தானியங்கி டெலர் இயந்திரங்கள் மற்றும் அட்டை வசதிகள் காணப்படுகின்றனவா என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1615/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பரிசர மாவத்த கருத்திட்டத்தின்" கீழ், தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களில் சுற்றாடல் பாதைகளை அமைப்பதற்காக சுற்றாடல் அமைச்சு 2018 ஆம் ஆண்டில் ரூ. 5 மில்லியன் நிதியை அப்போதைய அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு விடுவித்துள்ளபோதிலும், குறிப்பிட்ட நிதியில் ரூ.20,000/- மாத்திரம் செலவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) 2021 ஆம் ஆண்டில் 100 பரிசர மாவத்தகளை அமைப்பதற்கு திட்டமிடப் பட்டிருந்தபோதிலும், சுற்றாடல் பாதை தொடர்பிலான பொருள்கோடல் மற்றும் அளவுகோல்கள் அறிமுகம் செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) சுற்றாடல் அமைச்சின் 2021ஆம் ஆண்டுக்கான பணித் திட்டத்தில் பரிசர மாவத்த கருத்திட்டம் உள்வாங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iv) பரிசர மாவத்த கருத்திட்டத்தின் உத்தேச நோக்கங்களை அடையாமல் குறிப்பிட்ட கருத்திட்டத்தை செயற்படுத்துவதை நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1636/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையிலிருந்து வருடாந்தம் அனுகூலங் களைப் பெற்றுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தினால் அனுகூலங்கள் வழங்கப்படும் விபத்துகள் தொடர்பில் மக்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படும் அனுகூலங்களை மேலும் அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை மேலும் மக்கள் நேயமிக்க நிறுவனமாக பேணிச் செல்வதற்கு யாதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1675/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வகையான கைதிகளுக்கும் வழங்கப்படும் உணவின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அந்த எண்ணிக்கையைக் கடந்து தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1756/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக சேவைகள் திணைக்களத்தினால் அங்கவீனமுற்ற ஆட்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தற்போது அமுலில் உள்ளதா;

(ii) ஆமெனில், வீடொன்றை அமைப்பதற்காக குடும்பமொன்றுக்கு வழங்கப்படும் பணத்தொகை யாது;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுவரை வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாது;

(iv) வருடமொன்றில் வீடமைப்பு உதவிகள் வழங்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் எதிர்காலத்திலும் அமுல்படுத்தப்படுமா;

(vi) வழங்கப்படும் வீடமைப்பு உதவித்தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1801/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களில் நடாத்தப்பட்டு வருகின்ற முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிலையங்களில் தற்போது பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்யும் இளைஞர், யுவதிகள் தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொழில்வாய்ப்புகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1812/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின், நம்புக்கணை தொடக்கம் கலகெதர வரையான 20 கி.மீ தூரம் கொண்ட பகுதியை நிர்மாணிப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்கென கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த உள்நாட்டுக் கம்பெனிகளின் எண்ணிக்கை, அத்தகைய கம்பெனி ஒவ்வொன்றினதும் பெயர் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்கள் தனித் தனியாக யாவை என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த வெளிநாட்டுக் கம்பெனிகளின் எண்ணிக்கை, அத்தகைய கம்பெனி ஒவ்வொன்றினதும் பெயர் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்கள் தனித் தனியாக யாவை என்பதையும்;

(iv) இந்தக் கேள்விப் பத்திர நடைமுறையில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக எழுகின்ற குற்றச்சாட்டுகள் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2530/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிண்ணியா, மூதூர், வெருகல், தம்பலகாமம் மற்றும் குச்சவெளி ஆகிய ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும் காணி உரித்து உறுதிகளைக் கொண்டிராத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அரச காணிகளில் குடியிருக்கும், உரித்து உறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2575/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது விதை நெல் தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விதை நெல் உற்பத்தி செய்வதற்கு பொருத்தமான பிரதேசங்கள் மற்றும் விவசாயிகள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்விவசாயிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்;

(iii) சிறு போகத்திற்கும் பெரும் போகத்திற்கும் தேவையான விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 மே 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2622/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2691/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாயிகளினால் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகளினதும் களைநாசினிகளினதும் விலை மிக உயர்வாக உள்ளது என்பதையும்;

(ii) அவை சரியான தரத்தில் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிருமி நாசினிகள் மற்றும் களை நாசினிகளை இறக்குமதி செய்யும்போது ஒழுங்குறுத்துகைப் பணிகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) கிருமி நாசினிகள் மற்றும் களை நாசினிகளின் பயன்பாடு தொடர்பில் விவசாய வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஊடாக விவசாயிகளை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) விவசாய இரசாயனப் பொருட்களை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2843/2023

கௌரவ யூ.கே.சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் "சிரம சுவ ரெக்கவரண' சுகாதார காப்புறுதித் திட்டம் நடைமுறைபடுத்தப்படுகின்றதா;

(ii) மேற்படி காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள் உரித்தாகும் தரப்பினர்கள் யாவர்;

(iii) ஒரு பயனாளிக்காக செலுத்தப்படும் அனுகூலத் தொகை எவ்வளவு;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டுள்ள அனுகூலத் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2878/2023

கௌரவ யதாமினீ குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருமளவிலான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளதோடு, சாதாரணமாக ஒருவர் இலங்கைக்கு அனுப்புகின்ற நிதித் தொகையானது, கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட தற்போது அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வாறு எண்ணிக்கையில் அதிகளவான இலங்கைத் தொழிலாளர்கள் இருக்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவ்வாறு அதிகூடிய இலங்கை தனிநபர் பணவனுப்பல் சராசரி பெறுமதிகளைக் கொண்டுள்ள பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) அவ்வாறே ஒட்டுமொத்தமாக, அதிகூடிய பணவனுப்பல்களை மேற்கொள்கின்ற பத்து நாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நாடுகளிலிருந்து அல்லது நகரங்களிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் வசதிகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2933/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓமான் மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு இலங்கைப் பெண்களை கொண்டு செல்லும் மனித வியாபாரம் இடம்பெறுவதை அறிவாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வியாபாரத்துடன் மேற்படி நாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதரக பணியாளர்களும் தொடர்புபட்டுள்ளதாக தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு பணியாளரினதும் பெயர், பதவி மற்றும் சேவை நிலையம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பணியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் மற்றும் அந்நாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் பணியாளர் களுக்குமிடையில் நல்லுறவை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2968/2023

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ தேர்தல்கள் நடைபெற்ற திகதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றி பெற்று தொடர்புடைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள், எரிபொருள் மற்றும் பிற வசதிகளுக்காக உறப்பட்ட செலவுகள் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்காக உறப்பட்ட அத்தகைய செலவினங்களுடன் ஒப்பிடுகையில், கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்காக அவர்களிடமிருந்து கிடைத்துள்ள பங்களிப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3075/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் புகையிரத வீதிகளின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) கரையோர வீதி, பிரதான வீதி, களனிவெளி வீதி மற்றும் புத்தளம் வீதி ஆகிய ஒவ்வொரு புகையிரத வீதியினதும் நீளம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு புகையிரத வீதியிலும் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத வீதி கடவைகளை பாதுகாப்பான புகையிரத வீதி கடவைகளாக மாற்றுவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3091/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் புகையிரத நிலையங்களின் பெயர்கள் யாவை;

(ii) மிகச் சிறந்த புகையிரத சேவையினை பேணிச் செல்வதற்காக புகையிரத நிலைய அதிபர்களின் சேவை இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இறுதியாக புகையிரத நிலைய அதிபர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) இலங்கை புகையிரத திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புகையிரத நிலைய அதிபர்களின் எண்ணிக்கை யாது;

(v) புகையிரத நிலைய அதிபர் பதவியில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3104/2023

கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியமனங்கள் எவ்வடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரிய உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவையின் 3(I) ஆம் தரத்தின் (ஆ) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்குகையில் தொண்டர் ஆசிரியர்களாக 2013.07.01 ஆந் திகதி தொடக்கம் 2018.08.01 ஆந் திகதி வரை சேவையாற்றிய காலப்பகுதி இவர்களின் சேவைக்காலத்துக்கு சேர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட திகதியினை இவர்களின் ஆசிரியர் சேவையின் ஆரம்ப நியமனத் திகதியாக கருதுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3153/2023

கௌரவ தவராஜா கலை அரசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் 2020.06.25 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கல்முனை கல்வி வலயத்தின், கல்முனை, கமு/கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் தொழில்நுட்பக் கல்விக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு நிதி ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட நிர்மாணத்திற்காக அப்பாடசாலையின் கணினி அறை மற்றும் ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் முறையான அனுமதியின் கீழ் அகற்றப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பாடசாலையில் தொழில்நுட்ப பாடநெறியைப் பயில்வதற்கு புதிய அல்லது பழைய கட்டிடமொன்று இல்லை என்பதால் மாணவர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இதுவரையும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் தற்போதைய நிலை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 மே 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த "நல்லாட்சி அரசாங்கம்" ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இருந்தது என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரின் பெயர் மற்றும் அமைச்சுச் செயலாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

386/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான, அரிதான மற்றும் அழிவடையும் ஆபத்திலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மரபணு பாகங்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதில் ஈடுபடுகின்ற வெளிநாட்டவர்கள் உள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து விதிக்கப்படும் தண்டப் பணத்தை செலுத்திய பின்னர் இலகுவாக இலங்கையை விட்டு வெளியேற இவர்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளதா என்பதையும்;

(iii) இவர்கள் அடிக்கடி இலங்கைக்கு வருகை தந்து மேற்படி விடயத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நடவடிக்கையில் ஒழுங்கமைந்த வகையில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான வனவிலங்கு உத்தியோகத்தர்கள் உள்ளனரா என்பதையும்;

(ii) இன்றேல் மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வழிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையின் காடுகளில் சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டவர் களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

416/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கைப் பொலிஸ் வசமுள்ள உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் மோப்ப நாய்களின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வகைக்கும் ஏற்ப உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ பொலிஸ் மோப்ப நாய் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் வரை பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

431/2023

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்யாகீர்த்தி, வித்யாஜோதி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற ஒவ்வொரு கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கௌரவ நாமம்/கௌரவ பட்டம்/ பதவி வழங்கப்படும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் இதர தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இதர கௌரவ நாமங்கள்/ கௌரவ பட்டங்கள்/பதவிகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்குகின்ற இலங்கையின் தனியார் நிறுவனங்கள்/அமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம்/அமைப்பினால் வழங்கப்படுகின்ற கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள்/அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக அரச செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறை யாதென்பதையும்;

(v) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்கிய பின்னர் குறித்த ஆட்கள் தொடர்பாக பின் ஆய்வு மேற்கொள்ளும் செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அச் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

690/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவின் துறைநீலாவணை பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமிய வைத்தியசாலை இன்றளவில் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக இரண்டு மருத்துவர்களை நியமிக்க வேண்டியபோதிலும், இன்றளவில் ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அந்த மருத்துவருக்கு வேறொரு வைத்தியசாலையிலும் பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) ஆரம்ப காலத்தில் இந்த மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியொன்று இருந்தபோதிலும் தற்போது நோயாளர் காவு வண்டியொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்காததன் காரணம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்காமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவும், நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

814/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தேவையான முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுமாயின், அத்தட்டுப்பாடானது அன்றாட மற்றும் மாதாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அன்றாடம் 1000 இற்கும் மேற்பட்ட, 10,000 இற்கும் மேற்பட்ட மற்றும் 100,000 இற்கும் மேற்பட்ட முட்டைகள் எனும் ஒவ்வொரு தொகுதியின் கீழ் முட்டைகளை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் கீழ் நாளொன்றில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முட்டை ஒன்றினை இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றினை நுகர்வோருக்கு வழங்கக் கூடிய விலை எவ்வளவு என்பதையும்;

(iii) முட்டை உள்ளிட்ட சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் ஏமாற்று வியாபாரிகளால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3169/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களைக் கோருகின்ற வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடும் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மொழிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மொழிச் சான்றிதழ்கள் மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படாத நாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களை அனுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான தகைமைகளை துரிதமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3226/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டின் பின்னர் களுத்துறை மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக மாற்றியமைக்கப்பட்ட மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர், உள்ளடங்கும் கல்வி வலயம், மாணவர்களின் எண்ணிக்கை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மாகாண பாடசாலையாக காணப்பட்ட காலம் முதல் நீண்ட காலமாக மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் சேவையாற்றி, இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு ஆசிரியரும் சேவையாற்றும் பாடசாலை, சேவைக் காலம் மற்றும் கல்வி வலயம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதன் காரணமாக ஏற்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி இடமாற்றங்களை வழங்கும் போது தொடர்புடைய பாடசாலை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இதன் காரணமாக ஏற்படுகின்ற அநீதியைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3227/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அரசாங்க ஊழியர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக விண்ணப்பித்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களுள் தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக எதிர்காலத்தில் ஆற்றுப்படுத்த எதிர்பார்த்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்படுகின்ற அரசாங்க ஊழியர்களை, குறித்த தொழில்களின் நிமித்தம் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3237/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் அமய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சுமார் 500 ஊழியர்கள் இன்றளவில் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தில் பணியாற்றுகின்றனரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறித்த ஊழியர்களுக்கான சேவை நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(ii) இலங்கையில் நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்கள் மேற்படி ஊழியர்கள் தொடர்பில் மீறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அரச ஊழியர்கள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இந்த ஊழியர்களுக்கான சம்பளம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2023 மே 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

836/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை மற்றும் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நாடுகள் யாவை;

(iv) மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்துள்ள கம்பனிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

851/2023

கௌரவ காமினி வலேபொட,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம், காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென தற்போதைய அரசாங்கத்தின் பிரதானிகள் தெரிவித்துள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இன்றளவில் மத்திய அரசாங்கத்துக்குரிய காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு மாகாணத்தில் வசிக்கும் குடியிருப்பாளரொருவர் இன்னுமொரு மாகாணத்திலுள்ள காணியொன்றைக் கொள்வனவு செய்யும்போது பின்பற்ற வேண்டியுள்ள புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறான நிலைமையில் தமது மாகாணத்திலுள்ள காணிகளை வெளிநாட்டவருக்கு அல்லது வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கோ யாதேனுமொரு மாகாண சபைக்கு அதிகாரம் கிடைக்குமா என்பதையும்;

(v) மாகாண சபையொன்றுக்கு அதன் தற்றுணிபின் படி மேற்படி அதிகாரங்களை நிறைவேற்றிக்கொள்ள உரிமை கிடைக்குமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

860/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கொவிட்-19 நோயுடன் தொடர்புடையதாக —

(i) ஆய்வுகூடத்தினால் உறுதி செய்யப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) உறுதி செய்யப்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) மரணித்தவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான மரணங்களின் எண்ணிக்கை விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(ஆ) 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கொவிட்-19 மரணங்களுடன் தொடர்புடையதாக —

(i) சடலங்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறை/முறைகள்;

(ii) தகனக்கிரியை மேற்கொள்ளப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iv) தகனக்கிரியை மற்றும் அடக்கம் செய்யப்பட்டவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

869/2023

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை அனுராதபுரம் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி சிறுநீரக நோயாளிகளில் இன்றளவில் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவைப் பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் சிறுநீரக நோயாளிகளின் நலன்புரிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1306/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கெமி செரிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு பேருந்தினதும் பயணப் பாதை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) பொலன்னறுவை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1319/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர் தரம்) —

(i) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட காலம்;

(iii) பெறுபேறுகளை மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட காலம்;

(iv) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட காலம்;

(v) மேற்படி மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு எடுக்கப்பட்ட காலம்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1324/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலையொன்றிலுள்ள வகுப்பொன்றில் இருக்கக் கூடிய அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுற்றுநிருபமும் வெளியிடப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சுற்றுநிருபம் மூலமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு அரசாங்கப் பாடசாலையொன்றிலுள்ள வகுப்பொன்றில் இருக்கக் கூடிய அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கையை 45 வரை உயர்த்துவதற்கான தீர்மானமொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாயின் அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கல்விசார் தொழிற்சங்கங்கள் அத்தீர்மானத்தை கடுமையாக எதிர்த்துள்ள நிலையில் அத்தீர்மானத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1325/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் இன்றளவில் வலுவூட்டப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சமுர்த்தி நிவாரணத்தைப் பெறும் நோக்கத்துடன் விண்ணப்பித்துள்ள பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் அநுராதபுர மாவட்டத்தில் உள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1714/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கான சோளத்தின் தேவை மற்றும் உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் சோளம் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு மற்றும் அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையை சோள உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2879/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபம்/ நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டுக்காக மேற்படி கூட்டுத்தாபனம் வெகுமதி செலுத்தியுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(iii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு சேவைத் தொகுதியின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) பொதுத் திறைசேரியின் ஆலோசனைகளை கருத்திற்கொள்ளாது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகத்தினரால் வெகுமதி செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?